1987 மார்ச் 27]

தலைமைச் செயலகத்தில் மின்தடை.

92—(* வினா எண் 9200) திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் அடிக்கடி மின் தடை ஏற்படுவது உண்மையா?

(ஆ) அதை நீக்குவதற்கு மாற்று ஏற்பாடு ஏதும் செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. ஆகவே அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

93—(* வினா எண். 10348) திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலூர்பேட்டை—தியாகதுருகம் சாலையில் தென் பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பாலம் கட்டும் பணிக்காக விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுப் பணிகள் முடிக்கப்பட்டதும் விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படும். அதன் பின்னர் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு இப்பாலம் கட்டும் பணி செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்தல்.

94—(*வினா எண். 10509) திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுகம் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட்டிலே கடலூர் துறைமுகம் விரிவுபடுத்தப்படும் என்று இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லும்போது இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அங்கு முன்பு நல்லமுறையில் துறைமுகம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. ஆகவே அதை விரிவுபடுத்துவதற்கான செயற் குறிப்பை எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே ஏறத்தாழ 20 லட்ச